# அன்பு மக்களே!

தமிழ் கத்தோலிக்க மாதாந்த வெளியீடு வைகாசி 2026 ஒளி 32 கதிர் 315
TAMIL CATHOLIC PUBLICATION MAY 2026 YEAR 32 VOl: 315

## வணக்க மாதா சிறப்பு இதழ்




கனடா தமிழ் கத்தோலிக்க இணையம் https://ctcnw.org/


# பொருளடக்கம்

கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்
Canada Tamil Catholic Network
https://ctcnw.org/




## அன்பு மக்களே பக்கம்

'அறிவிற்கும் ஆன்மீகத்திற்குமான தேடல் சஞ்சிகை'



03. ஆசிரியர் பக்கம்




04. 05பரிசுத்த மாதாவின் வணக்க மாதம்



06. நம் ஆண்டவரின் விண்ணேற்ற பெருவழா



07. பெந்தக்கோஸ்தே பெருவிழா




08. புனித பாத்திமா அன்னை பெருவிழா




09. அன்னை ஓர் அதிசயம்




10-11. முள்ளிவாய்க்கால் நினைவு தினம் 2026



12-13. மடுப்பதி தேவமாதாவும் தேவன்பிட்டியும்




14. பரிசுத்த பரம திரித்துவ பெருவிழா



15. புனித யூஜின் டி மசனெட்



16. புனித சூசையப்பர் தொழிலாளர் தினம்



17. அன்னையர் தினம்

**ஸ்தாபிதம்**

ஆனி 1995

**முகவரி**

41 EARL STREET, TORONTO. ON.M4Y 1M4 CANADA.

**Email :** tamilcatholicpublication@gmail.com

Webside :https://ctcnw.org/

**தோலை பேசி :**

+1(647) 852-3141

**தயாரிப்பு + வெளியீடு**

கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்

**ஆசிரியர் குழு**

திரு தோமஸ் டேவிட்

சகோ. மரீனா அந்தோனிப்பிள்ளை

**ஆலோசனை குழு**

அருட் தந்தை வார்கீஸ் செல்வராஜா

அருட் தந்தை அந்தோனிப்பிள்ளை தோமஸ்

அருட் தந்தை யூபின் லோரன்ஸ்

**தெழில் நுட்ப உதவி**

திரு மரியதாஸ்

சகோ. மரீனா அந்தோனிப்பிள்ளை

**விநியோகஸ்தர்கள்**

கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்

தன்னார்வத் தொண்டர்கள்

**கிடைக்கும் இடங்கள்**

**ரொறொன்ரோ**

புனித அந்தோனியார் தேவயலயம்

புனித லூர்து மாதா தேவாலயம்

புனித ரோசா லீமா தேவாலயம்

புனித பர்னபாஸ் தேவாலயம்

புனித எயார் வேய்ஸ் தேவாலயம்

**மாக்கம்**

தோமாஸ்மோர் தேவாலயம்

போனிபஸ் தேவாலயம்

**டொன்மில்ஸ்**

புனித 23ம் அருளப்பர் தேவாலயம்

தமிழ் கத்தோலிக்க புதுவாழ்வுக்குழு

தமிழ் மொழ் கற்கும் வகுப்புக்கள்

மெக்கா சிற்றி வர்த்தக ஸ்தாபனங்கள்

**ஆதரவு**

கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்



கத்தோலிக்க திரு அவையின் வணக்க மாதா மாதத்தில் வெளிவரும் எமது அன்பு மக்களே மே மாத சஞ்சிகை சிறப்பு இயல்புகளோடு வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச்சி கொள்கின்றோம். திரு அவையின் திருவழிப்பாட்டு நாட்காட்டியின் மே மாதத்திற்கான முக்கிய ஆன்மீகத்தை முழுமையாகவும் புதுமையான விதத்திலும் வெளிக்கொணர்ந்துள்ளோம். திரு அவைக்கு மே மாதம் மிகவும் ஒரு முக்கியமான மாதம் காரணம் இது வணக்கம் மாதா மாதம். இம்மாதம அன்னைமரியாளுக்கென அர்ப்பணிக்கப்பட்ட மாதம்.

இவ் சஞ்சிகையில் வெளிவரும் கட்டுரைகள் ஆக்கங்கள் நமது அன்னையை குறித்த ஆழமான ஆன்மீகத்தை உங்களுக்குத் தந்து, அன்னைக்கான வணக்கத்தை இன்னும் ஆழப்படுத்தும் என நம்புகின்றோம். மேலும் கிறிஸ்தவர் நமது விசுவாச வாழ்வின் உயிர் நாடியான ஆண்டவரின் உயிர்ப்பு பெருவிழா, திருஅவையின் பிறந்த நாளான பெந்தகோஸ்தே பெருவிழா ஆகியன இவ் சஞ்சிகையில் சிறப்பு பெறுகின்றன.

இம் மே மாதம் எமது தமிழர் தாயகத்தில் 2009இல் நிகழ்ந்தேறிய இரண்டாவது கருப்பு ஜூலை என வர்ணிக்கப்படும் தமிழர் இன படுகொலை நினைவு தினம குறித்த கட்டுரை, யுத்த வலிகளை தாங்கி நிற்கும் இலங்கை தமிழர்களுக்கு ஆறுதலாக அமையும் என்று நம்புகின்றோம். மேலும் இவ் சஞ்சிகையில் இம்முறை வெளிவரும் "தேவன் பிட்டியும் தேவமாதாவும்" என்னும் ஆய்வு கட்டுரை ஒரு புதிய அத்தியாயத்தை எமது விசுவாச உலகிற்கு திறப்பதையிட்டு பெருமிதம் கொள்கின்றோம். இதைக்குறித்த உங்களது கருத்துக்களை எமக்கு தெரியப்படுத்தலாம். இதன் மூலம் நாம் இன்னும் சிறப்பான விதத்தில் இந்த ஆய்வுக்கட்டுரையை முன்னெடுக்க உதவும் என நம்புகின்றோம்.

இவ் சஞ்சிகையின் மூலம், திருவைக்கும் தமிழருக்கும் செய்யும் சேவையை இறைவன் ஆசிர்வதிக்கவும், இவ் சஞ்சிகையை படிக்கும் உங்களது அறிவிற்கும் ஆன்மீகத்திற்குமான தேடல் முழுமை பெறவும் எல்லம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்

**அன்புடன் ஆசிரியர் டேவிட் தோமஸ்**

# பரிசுத்த மாதாவின் வணக்க மாதம்



மே மாதம் வணக்க மாதா மாதம். ஏன் எமது திருஅவை இந்த ஒரு மாதத்தை மட்டும் அன்னைக்கென பிடித்துவைத்திருக்கின்றது. "உங்களுக்கு ஒரு மாதா இருப்பது போல் எனக்கும் ஒரு மாதா இருந்திருந்தால் நிச்சயமாக நான் சாத்தானாக மாறி இருக்க மாட்டேன்" என ஒரு பேய் கதறிய ஒரு கதை உங்களுக்கு தெரியுமா? பல நூற்றாண்டுகளுக்கு முன் ஒரு குருத்துவக் கல்லூரியில் இரகசியமாக தொடங்கிய ஒரு ஜெபம் உலகம் முழுவதும் பரவியது எப்படி? இதன் பின்னால் இருக்கும் 500 ஆண்டு கால இரகசியத்தை இன்று நீங்கள் தெரிந்து கொள்ளப் போகிறீர்களா?

அன்பார்ந்த தமிழ் கத்தோலிக்க உறவுகளே வசந்த கால வளர்ச்சியோடு நம்பிக்கையோடும் நாம் மே மாதத்திற்குள் நுழைகின்றோம் இது வெறும் மாதம் மட்டுமல்ல மரியன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு புனிதமான மாதம் மே மாதம். சிலுவையின் அடியில் இயேசு நமக்கு கொடுத்த விலை மதிக்க முடியாத பரிசு நம் அன்னை மரியாள், "இதோ உன் தாய்" என்று இயேசு கூறிய அந்த வார்த்தைகள் இன்றும் நம் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. மே மாதம் பூக்கள் வளரும் மாதம். இயற்கை பத்துயிர் பெறும் மாதம். புதிய வாழ்வு பூமியில் வெளிப்படும் காலம். கத்தோலிக்க திருச்சபை இந்த இயற்கை அழகை பார்க்கும்போது மனதில் ஒரு ஆன்மீக உண்மையை கண்டது. ஐரோப்பிய, மேலய நாடுகளில் மே மாதம் என்பது வசந்த காலத்தின் உச்சகட்டம், குளிர்காலம் முடிந்து மலர்கள் துளிர்த்து, பூத்துக் குலுங்கும் இந்த காலம் புதிய வாழ்க்கையின் அடையாளமாக கருதப்பட்டது. மலர்கள் மலர்வது போல அன்னை மரியாளின் மூலம் தேவ இரக்கம் இந்த உலகத்தில் மலர்ந்தது இந்த உலகின் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து அன்னை மரியாளின் "ஆகட்டும்" என்ற கீழ்ப்படுதலின் வழியாக இந்த உலகிற்கு அவதாரம் எடுத்து வந்தார். அதனால் புதிய வாழ்வின் அடையாளமாகிய இந்த மே மாதம் புதிய இரக்கத்தின் தாயாகிய அன்னை மரியாளுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. ஏனெனில் அன்னை மரியாள் ஒரு அழகிய மலர் இரக்கம் நிறைந்தவள், புதிய ஏவாள் என்று திருச்சபை உணர்ந்தது.

அன்பிற்குரியவர்களே இது வெறும் உணர்ச்சி சார்ந்த பழக்கமல்ல. பல நூற்றாண்டுகளாக வளர்ந்த திருச்சபையின் ஒரு பக்தி மரபு. 13 ஆம் நூற்றாண்டில் ஸ்பெயின் நாட்டு மன்னன் பத்தாம் அல்போன்சோ மரியாளின் புகழ்ச்சியாக 400 பாடல்களை எழுதினார். அவர்தான் முதலில் "மே மலர்கள் மரியாளின் நற்குணங்களின் அடையாளம்" என்று எழுதினார். மே மாதத்தின் ஒவ்வொரு நாளும் மரியாளுக்கு சிறப்பு புகழ்ச்சி பாடல்களை பாட வேண்டும் என்று அவர் ஊக்குவித்தார். 16ம் நூற்றாண்டில் புனித பிலிப்பு நேரி போன்ற புனிதர்கள் குழந்தைகளை மற்றும் இளைஞர்களை மே மாதத்தில் அன்னை மரியாளுக்கு மலர்கள் தூவி வழிபட செய்ய தொடங்கினார். ஆனால் மே மாத பக்தியின் நவீன வடிவம் 18ம் நூற்றாண்டில் இத்தாலியில் இயேசு சபையை சார்ந்த அருள் தந்தை லட்டோமியாவிடம் இருந்து தொடங்கியது. அவரது மாணவர்கள் தவறான பழக்கங்களில் விழுந்து கொண்டிருந்தனர். இவர்களுக்கு பிரசங்கித்து பயனில்லை என்று புரிந்துகொண்ட அவர், ஒரு துணிச்சலான முடிவை எடுத்தார். இந்த மே மாதம் முழுவதும் ஒவ்வொரு நாளும் அன்னை மரியாளுக்கு ஒரு சிறப்பு ஜெபம் செய்வோம். அந்த தேவ தாயை நம்முடைய வாழ்வில் அரசியாக ஏற்போம் என்று மாணவர்களை உற்சாகப்படுத்தினார். மாணவர்களுடைய அன்றாட வாழ்க்கையிலே அதன் வழியாக இந்த பக்தி முயற்சி வெற்றி கண்டது. மாணவர்களுடைய தவறான வழிகளை எதிர்கொள்ள அவர் மே மாதம் முழுவதும் மரியாளுக்கு அர்ப்பண

து

பற்றிய செய்தி இயேசு சபை கல்லூரிகளுக்கும் பரவியது. பின்னர் உலகம் முழுவதும் இந்த மே மாத பாக்தி முயற்சி பரவத் தொடங்கியது.

பின்னர் 1815 ஆம் ஆண்டு திருத்தந்தை 7ம் பயஸ், இந்த மே மாதம் மரியன்னை பக்தியை அதிகார பூர்வமாக அங்கீகரித்தார். அதன்பின்னர் திருத்தந்தை 13ம் லியோ, மாதா கோவில்களில் இரவு வேளைகளில் ஜெபமாலை ஜெபிக்க அழைப்பு விடுத்தார். பின்னர் பல திருத்தந்தையர்கள் குறிப்பாக திருத்தந்தை 6ம் பவுல் 1965 இல் **“மென்ஸே மாயோ”** (**Mense Maio**), என்ற சுற்று மடலின் மூலம், மே மாதம் மரியாளுக்கு இதய பூர்வமாக அஞ்சலி செலுத்தும் மாதம் என்ற அழைப்பை விடுத்தார். இந்த மரபு உலகம் முழுவதும் பரவியது. இதனால் 19ஆம் நூற்றாண்டில் இருந்து உலகம் முழுவதும் எல்லா மாதா கோவில்களிலும் மே மாதம் மாதா பக்தி சிறப்பாக தொடங்கியது. மலர் அலங்காரம், மாதா கீர்த்தனைகள், ஜெபமாலை, மாதாவின் தேர் ஊர்வலங்கள் என்று இவை எல்லாம் நம் முன்னோர்களின் விசுவாசத்தை இன்னும் எங்களுடைய இதயங்களில் மெய்ப்பித்துக் கொண்டே இருக்கின்றன.

இன்று ஒவ்வொரு கத்தோலிக்க குடும்பத்திலும் இந்த மே மாதம் வணக்க மாதா பக்தி முயற்சி ஒரு ஆன்மீக பழக்கமாக மாறி இருக்கிறது. ஆனால் மே மாதம் என்பது நமது நாட்காட்டிகளில் ஒரு பக்கம் மட்டுமல்ல அது ஒரு அழைப்பு. ஏனெனில் மரியாள் பக்தி என்பது ஒரு அழைப்பு. ஏனெனில் மரியாள் பக்தி என்பது ஒரு **“DEVOTION”** அல்ல மாறாக இது ஒரு **“TRANSFORMATION”.** இந்த மே மாதத்தில் உங்கள் வாழ்வை மாற்ற போகிறீர்களா அல்லது வழக்கம் போல கொண்டாட்டங்களில் மறைந்து கொள்ளப் போகிறீர்களா? இந்த மே மாதத்தை பயனுள்ள விதத்தில் செலவு செய்ய 5 செயல்களை செய்தாலே போதும், இந்த மே மாதம் அர்த்தத்தை பெற்று விடும்.

முதலாவது, ஜெபமாலையை நம்முடைய ஆயுதமாக கையில் எடுக்க வேண்டும். குடும்ப ஜெபமாலை சாத்தான் பயப்படும் ஒரே ஒரு ஆயுதம். புனித ஜோன் போஸ்கோ மே மாதம் தனது இளைஞர்களுடன் ஒவ்வொரு மாலை வேளையிலும், மாலை ஜெபம், மரியாள் புகழ்ச்சி, அன்னைக்கு கிரீடம் என்று மே மாதம் முழுவதும் மரிஅன்னையை மகிமைப்படுத்திக் கொண்டே இருந்தார். இரண்டாவது அன்னைகென்று ஒரு பீடம் அமைப்பது. இப்பீடத்தில் அன்னையின் திருச்சுருபத்தை அமர்த்தி, மே மாத பூக்களால் அலங்கரித்து, தீபம் ஏற்றி, தூபம் காட்டி அன்னைக்கு மரியாதை செய்ய வேண்டும்.

மூன்றாவது, ஏதாவது ஒரு கெட்ட பழக்கத்தை விட்டு விடுங்கள்: எதற்கெல்லாம் அடிமையாகி உள்ளீர்களோ அதனை விட்டு விடுங்கள். 1917 மே மாதத்தில் தான் பாத்திமாவில் அன்னை மரியாள் மூன்று சிறுவர்களுக்கு தோன்றினார். அவள் கூறிய வார்த்தை இதுதான்: “ஜெபமாலை செபியுங்கள், பாவிகள் மனம் திரும்ப ஜெபியுங்கள் என்றாள். மே மாதம் நமது மன மாற்றத்தின் மாதம். நான்காவது, மரியன்னை பேரில் நற்செயல்கள் செய்தல். ஐந்தாவது மே மாத இறுதியில் அயலவரோடு சேர்ந்து மாதாவுக்கு ஒரு முடி சூட்டு விழா நடத்துங்கள். இதனை **“MAY CROWNY”** என்று ஆங்கிலத்தில் அழைப்பார்கள்.

அன்னை மரியாள் விண்ணுக்கும் மண்ணுக்கும் அரசி என்று கூறி அவளுக்கு மணி மகுடம் சூட்டுவோம். எனது குடும்ப திருப்பீடத்தின் அரசியாக நமது இல்லத்தின் இதயத்தின் குடும்பத்தின் அரசியாக சாட்சி பகர்வோம். மே மாதம் என்பது அன்னைக்கு மரியாதை செய்யும் மாதம் மட்டுமல்ல எமது அன்னை மரியாளை போல வாழ ஆரம்பிக்கும் மாதம். அன்னையின் இதயத்தின் ஊடாக இயேசுவின் இதயத்திற்குள் நம் இதயத்தை அர்ப்பணிக்கும் மாதம். மலர்களைப் போல் நம்முடைய இதயங்களும் மலரும் மாதம். இவ்வாறு இம்மாதத்தில் எமது ஆன்மா புதுப்பிக்கப்பட்டு அன்னை மரியாளின் குழந்தைகளாக நம்மை அர்ப்பணிப்போம்.

ஜெபம் இறைவனின் தாயே விண்ணக மண்ணக அரசியே எங்கள் குடும்பத்தை உமது பாதுகாப்பில் ஒப்புக்கொடுக்கின்றோம். எங்கள் பலவீனங்களில் எங்களுக்கு பலம் தரும். எங்கள் சந்தேகங்களில் எங்களுக்கு நம்பிக்கையை தாரும். எங்கள் துன்பங்களில் ஆறுதல் தாரும். இந்த மே மாதம் முழுவதும் எங்கள் ஒவ்வொரு ஜெபமும், ஒவ்வொரு தியாகமும் உமது திருகரங்களில் வந்து சேரும்படி எங்களை ஆசீர்வதியும். உமது அன்பு திருமகனிடம் எங்களுக்காக பரிந்து பேசும் ஆமென்

## அன்னை வழி ஆண்டவரிடம் செல்வோம்

**திருமதி அருள்ராணி,**




**ஆண்டவரின் விண்ணேற்பு பெருவிழாவை நாம் கொண்டாடும் இவ் நூற்றாண்டிலே, நாம் வாழுகின்ற உலகம் போலிகளையும், பொய்மைகளையும் உண்மையென்று உரக்க நம்புகின்ற உலகமாக திகழ்கின்றதை காண்கின்றோம்.** விளம்பர கலாசாரம் இதற்கு வழி செய்து கொடுக்கின்றது. பச்சைகளை பாலைகள் என்றும், பொட்டல் தரைகளை பசும்புல்வெளிகள் என்றும் திரையிட்டு காட்டுகின்ற ஓர் உலகம். திரையில் காண்பிக்கப்படுபவை எல்லாம் நிஜம் என்று நம்பி வாழ்வில் விரக்தியோடும், ஏமாற்றத்தோடும் வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்கு ஆண்டவரின் விண்ணேற்பு பெருவிழா நம்பிக்கையூட்டும் நற்செய்தியை நல்குகின்றது.

பசித்தால் மட்டுமே குனிந்து வயிற்றை பார்க்கின்ற மனிதர்களாய் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். எப்போது பார்த்தாலும் அடுத்தவரை பற்றிய பேச்சும், உலகத்தில் நடப்பவை பற்றிய விமர்சன பார்வையும், வீதிகளிலும், வீடுகளிலும் வீண் வதந்தி பேசுவதுமே வாழ்வியலாகி போன நமது வாழ்வை சவாலுக்கு உள்ளாக்குகின்றது எமது ஆண்டவரின் விண்ணேற்பு விழா. நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டே நிற்கிறீர்கள்? போங்கள், போய் உங்களுடைய சுய வாழ்வை ஆய்வு செய்யுங்கள். ஆண்டவர் எவ்வாறு விண்ணேறி சென்றாரோ அவ்வாறே அவர் மீண்டும் வருவார். **ஆகவே வீண் ஆரவாரங்களை அகற்றிவிட்டு உங்களுடைய சொந்த வாழ்வை அலசி பாருங்கள் என்று வானதூதர் வழியாக உரைக்கிறார்** இறைவன். ஆண்டவரின் விண்ணேற்பு நம் வாழ்வில் ஒரு தன்னேற்பு அனுபவத்திற்கு அழைக்கின்றது. வானத்தை பார்த்தது போதும், வாருங்கள் நமக்குள் இருக்கும் அழுக்குகளையும், அவலட்ஷணங்களையும் அலசிப்பார்த்து அகற்றுவோம்!

இயேசுவின் இறுதி ஆசை...

ஆண்டவர் இயேசு தாம் தந்தையிடம் செல்வதற்கு முன்பதாக தம் சீடர்களை உடல் அளவிலும், மன அளவிலும் நன்கு ஆயத்தம் செய்தார். இறுதி இரவுணவின் போது தமது நிலையான பிரசன்னமாகிய நற்கருணையை கொடுத்து, எப்பொழுதெல்லாம் அன்பின் நினைவாக அதனை வாழும்படி அறிவுறுத்தினார். றுதியாக தம் சீடர்கள் கண் முன்னே இயேசு ஆண்டவர் விண்ணேற்றம் அடைவதற்கு முன்னதாக தனது இறுதி ஆசை என்ன என்பதை தம் சீடர்களுக்கு வெளிப்படுத்தினார். நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் என்பதே அவருடைய இறுதி ஆசை. ஒவ்வொரு முறையும் இறைவார்த்தை அறிவிக்கப்படுகின்ற பொழுதும், தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் திருமுழுக்கு கொடுக்கப்படுகின்ற பொழுதும் ஆண்டவர் இயேசுவின் இறுதி ஆசை நிறைவேற்றப்படுகின்றது.

உன்னை ஆக்கி பின் தூக்கி சுமந்த உன் அம்மா, உன்னை உருவாக்க உழைத்து தேய்ந்து கொண்டிருக்கும் அப்பா, சகோதரர்கள், நண்பர்கள், யாருமே உன்னோடு இறுதிவரை பயணிக்க முடியாது. பிரிவின் தாற்பரியத்தை புரிகின்ற போது ஆண்டவரின் சந்நிதியே நெஞ்சுக்கு நிம்மதி என்கின்ற பேருண்மை புலப்பட தொடங்கிவிடுகின்றது. இயேசுவின் இந்த உடனிருப்பின வார்த்தைகள் சீடர்களை பணிக்களம் நோக்கி நகர்த்தியது. எத்தகைய சவால்கள் அவர்களது வாழ்வில், பணியில் குறுக்கிட்ட போதும் அவர்களை தாங்கி பிடிக்கின்ற சக்தி மையமாக இந்த உடனிருப்பின் வாக்குறுதி துலங்கியது. நம்மோடு உறையும் இம்மானுவேலனை கண்டுகொள்ள நமக்குள் நாம் பயணம் போவோம். பின் நற்செய்தியின் தூதுவர்களாக பக்கத்து வீட்டு படலை திறப்போம். வானத்தில் பதிய கண்களை திசை மாற்றி வையத்தில் கால் பதிப்போம். அனைவருக்கும் விண்ணேற்பு பெருவிழா நல்வாழ்த்துக்கள்!

**அருள்பணி குருதீபன் அ.ம.தி. பிரிட்டிஷ் கொலம்பியா**




**பெந்தேகோஸ்தே ஞாயிறு என்பது ஒரு கொண்டாட்டத்தை விட மேலானது — அது பரிசுத்த ஆவியின் வல்லமையால் திருச்சபை பிறந்த தருணம். இந்தப் புனித நாளில், ஒரு காலத்தில் பயந்து ஒளிந்துகொண்டிருந்த அப்போஸ்தலர்கள், கடவுளின் ஆவியால் கிறிஸ்துவின் துணிச்சலான சாட்சிகளாக மாற்றப்பட்டனர்.**

நான் மிகவும் அமைதியானவன், சாந்தமானவன், உணர்ச்சிவசப்படுபவன், உணர்ச்சியற்றவன். நான் அதிகமாக குறைவாக சிந்திக்கிறவன், அதிகமாக குறைவாக செய்கிறவன் என்று சொல்வதற்குப் பல காரணங்கள் உள்ளன, ஆயினும் மனமே பயப்படாதே. நம் ஆணடவர் பரலோகத்திற்கு ஏறிச் சென்றபோது, துணையாளரான பரிசுத்த ஆவியை அனுப்புவதாக வாக்குறுதியளித்து, பெந்தஸ்கோஸ்தே நாளில் துணையாளரை அனுப்பினார். நாம் ஒவ்வொருவரும் தூய ஆவியின் மூலம் புதுப்படைப்பாக பிறந்துள்ளோம். நம் ஒவ்வொருவருடை புதுப்பிறப்பும் கத்தோலிக்க திருஅவையின் பிறப்பாகியது.

அக்கினி நாவுகள் அவர்கள் மீது தங்குவதைப் போல, பரிசுத்த ஆவியானவர் எல்லா தேசங்களுக்கும் நற்செய்தியைப் பிரகடனப்படுத்த, அவர்களுடைய இதயங்களை விசுவாசம், வலிமை, ஞானம் மற்றும் தைரியத்தால் நிரப்பினார். அந்தத் தருணத்திலிருந்து, திருச்சபையின் பணி தொடங்கியது — அந்தப் பணி இன்றும் ஒவ்வொரு விசுவாசி, ஒவ்வொரு பணி, ஒவ்வொரு திருப்பலி, மற்றும் ஒவ்வொரு அன்பு மற்றும் சேவைச் செயல் மூலமாகவும் தொடர்கிறது.

**நாம் கத்தோலிக்க திருச்சபையின் பிறந்தநாளைக் கொண்டாடும் இவ்வேளையில், அப்போஸ்தலர்களுக்கு வழிகாட்டிய அதே பரிசுத்த ஆவியானவர் இன்றும் நமக்குள்ளே உயிரோடும் இயங்கிக்கொண்டும் இருக்கிறார் என்பதை ஆணித்தரமாக விசுவசிக்க அழைக்கப்படுகின்றோம். பலவீனமான நேரங்களில், அவர் வலிமையைத் தருகிறார். குழப்பமான நேரங்களில், அவர் ஞானத்தைத் தருகிறார். பயத்தின் நேரங்களில், அவர் தைரியத்தைத் தருகிறார் என்ற கத்தோலிக்க திருஅவையின், பரிசுத்த ஆவி குறித்த ஆன்மீகத்தை உங்கள் இதயங்களில் எழுதி வையுங்கள்.**

நமது விசுவாசம் குளிர்ந்து உறைந்து போக நாம் அனுமதிக்க கூடாது. இறைவனின் அன்பின் நெருப்பால் நம் இதயங்கள் மீண்டும் எரியட்டும். ஒளிக்கும் உண்மைக்கும் ஏங்கும் இவ்வுலகில், நாம் அமைதி, நம்பிக்கை மற்றும் இரக்கத்தின் கருவிகளாக மாறுவோமாக. யுத்தங்கள், வன்முறைகள், கலவரங்கள். கொலை, கொள்ளை, கற்பழிப்பு, சுரண்டல், பொய், புரட்டு, பித்தலாட்டம், குடிவெறி, குடும்ப அர்ப்பணிப்பின்மை, பிரமாண்க்கமின்மை போன்ற தீய ஆவிக்குரிய மனித இயல்புகள், தூய ஆவியின் தீப்பிளம்பினால் சுட்டெரக்கப்பட்டு, தூய ஆவிக்குரிய புனித இயல்புகளாக மாறட்டும். தூய ஆவியின் துணைகொண்டு புது உலகம் படைப்போம், புதுவாழ்வு வாழ்வோம், பிறரையும் புதுவாழ்விற்குள் பிறப்பிப்போம்.

இன்று, நாம் ஜெபிக்கிறோம்:“தூய ஆவியே, வாரும்; உம்முடைய விசுவாசிகளின் இதயங்களை நிரப்பி, அவர்களில் உம்முடைய அன்பின் நெருப்பைப் பற்றவையும்.”

கத்தோலிக்க திருஅவையே! இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள், !

**சகோ. டேவிட் தோமஸ்**

# புனித பாத்திமா அன்னை பெருவிழா



பாத்திமா அன்னையின் தரிசனம் பல நூற்றாண்டுக்கு முன்பு நடந்திருந்தாலும், பாத்திமா அன்னையின் செய்திகளும், வேண்டுகோள்களும், எச்சரிக்கைகளும் சமகால சவால்களுக்கும், உலக முழுவதும் பரந்திருக்கும் போர் சூழலுக்கும் ஒரு ஆன்மீகப் பிடிப்பையும் வழிகாட்டலையும் வழங்குகிறது. பெரும்பாலும் இன்று உலகளாவிய ரீதியில் கவலை, தார்மீக சார்புநிலைவாதம் மற்றும் அமைதியின்மையால் குறிக்கப்படும் இக்காலகட்டத்தில், வரலாற்றை மாற்றுவதற்கு ஜெபமும் அமைதியான, தியாக அன்பும் சக்திவாய்ந்த கருவிகள் என்பதை பாத்திமாவில அன்னை வழங்கிய செய்திகள் இன்றைய உலகிற்கும், உலக தலைவர்களுக்கும் மிக முக்கியமானது.

வரலாறு முழுவதும், பிரான்சின் லா சலெட், போர்ச்சுகலின் பாத்திமா, மற்றும் ஜப்பானின் அகிடா போன்ற இடங்களில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் அன்னையின் தோற்றங்கள், கடுமையான உலகளாவிய மோதல்களின் காலங்களுடன் அடிக்கடி ஒத்துப்போயுள்ளன. இந்த நிகழ்வுகளுடன் தொடர்புடைய செய்திகள், உலகப் போருக்கு ஈடாக மனந்திரும்புதல், ஜெபம் மற்றும் தவம் ஆகியவற்றைத் தொடர்ந்து வலியுறுத்துகின்றன.

ஆகவே, நாம் மிக முக்கியமாக உற்றுநோக்க வேண்டிய விடயம். அதாவது, முதலாம் உலகப்போரின் உச்சக்கட்டத்தில், அன்னை பாத்திமா பதியிலும், இரண்டாம் உலகப்போர் (1939 -1945) முன் 1931 இல் குவாடுலெப்ப பதியிலும், இன்னும், வத்திக்கானால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட பல தோற்றங்களும், வரலாற்று ரீதியாகப் போர் அல்லது கடுமையான அரசியல் கொந்தளிப்புக் காலங்களுடன் தொடர்புடையவையாகவும் அமைந்துள்ளன. உதாரணமாக, லா சலெட்டின் அன்னை (பிரான்ஸ், 1846): இரண்டு குழந்தைகளுக்குத் தோன்றிய அன்னை மரியாள், அழுதுகொண்டே ஐரோப்பா முழுவதும் வரவிருக்கும் பயிர்ச் சேதங்கள் மற்றும் கடுமையான பஞ்சம் குறித்து எச்சரித்தார். மேலும், உள்ளூர் மக்களை மனந்திரும்பி ஓய்வுநாளைக் கடைப்பிடிக்குமாறு வலியுறுத்தினார். பொன்ட்மெய்னின் அன்னை (பிரான்ஸ், 1871): பிராங்கோ-புருஷியப் போரின் போது, அன்னை மரியாள் வானத்தில் குழந்தைகளுக்குத் தோன்றினார். அவர் நம்பிக்கை மற்றும் பிரார்த்தனையின் செய்தியை வழங்கினார். சிறிது நேரத்திற்குப் பிறகு, புருஷிய இராணுவம் விளக்கமுடியாத வகையில் அந்த நகரத்தின் மீதான தங்கள் முன்னேற்றத்தை நிறுத்தியது. அகிடாவின் அன்னை (ஜப்பான், 1973): அணுகுண்டு மற்றும் பனிப்போரின் நிழலில் இருந்த ஒரு காலகட்டத்தில், மரியாவின் திருச்சுரூபம் ஒன்று உள்ளூர் கன்னியாஸ்திரி ஒருவருக்காக மனிதக் கண்ணீர் வடித்து இரத்தம் சிந்தியது. ஆன்னையின் செய்திகள் திருச்சபைக்கும் உலகத்திற்கும் வரவிருக்கும் கடுமையான சோதனைகள் குறித்து எச்சரித்து, பிரார்த்தனை மற்றும் பரிகாரச் செயல்களுக்கு அழைப்பு விடுத்தன.

எனவே! கத்தோலிக்க விசுவாசிகளான உங்களுக்கு நான் கூற விரும்புவது, “அன்னை வழி ஆண்டவரிடம் செல்வோம்” என்னும் எமது கத்தோலிக்க விசுவாசத்திலிருந்து வழிபிறழ்ந்து, பிரிவினை சகோதரர்களுடைய போதனைகளுக்கு எடுபட்டு, “ஆண்டவர் இருக்க, அன்னை வழி ஏன் ஆண்டவரிடம செல்லவேண்டும் “ என்ற சில கத்தோலிக்க அவிவிசுவாசிகள் இக்கட்டுரையை அமைதியாக படித்து, அன்னை குறித்த உங்களது நம்பிக்கையை புதிப்பித்து, அன்னை வழி ஆண்டவரிடம் வருவதையே இயேசு விரும்புகிறார் என்பதை உங்கள் இதயங்களில் எழுதிவையுங்கள். உலக நெருக்கடி வேளைகளில் மாத்திரமல்ல, உங்களது தனிப்பட்ட, குடும்ப நெருக்கடி வேளைகளிலும், நீங்கள் அனுதினம் செபமாலை ஜெபித்து அன்னையிடம்

**புனித பாத்திமா அன்னையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்**

**சகோதரி மரீனா அந்தோனிப்பிள்ளை**

# அன்னை ஓர் அதிசயம்

பழைய மற்றும் புதிய ஏற்பாடு நூல்கள், இறைவனின் மாபெரும் மீட்புத் திட்டத்தில் மீட்பரின் தாய் ஆற்றிய உன்னதமான பணியைத் தெளிவாக நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. மானிடம் வீழ்ந்த அந்தத் தொடக்க காலத்திலேயே, ஏதேன் தோட்டத்தில் முதல் பெற்றோரான ஆதாமுக்கும் ஏவாளுக்கும் மீட்பு குறித்த வாக்குறுதி அளிக்கப்பட்டது. அலகையின் மீது பெறப்போகும் வெற்றியைப் பற்றிய அந்தத் தீர்க்கதரிசனத்தில், அன்னை மரியாள் இறைவாக்காக முன்குறிக்கப்பட்ட அன்னை ஓர் அதிசயமே.

உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவோம் (தொ.நூல் 3:15) என்று இறைவன் கூறிய போதே, இறைவனின் மீட்புத் திட்டத்தில் ஒரு கருவியாகச் செயல்படத் தொடங்கிவிட்ட எம் அன்னை ஓர் அதிசயமே. இறைவனையே கருத்தாங்கி எந்தப் பெண்ணுக்கும் இல்லாத தனிச்சிறப்பு பெற்ற நம் அன்னை ஓர் அதிசயமே அது. இறைவாக்கினர் எசாயா வழியாக இறைவன் அளித்த வாக்குறுதி, நிறைவேறிய பாத்திரமான அன்னை ஓர் அதிசயமே. இறைவனின் மீட்புத் திட்டத்தில் அன்னை மரியாள் ஒரு தற்செயலான தேர்வு அல்ல.



காலம் கனிந்தபோது, கடவுள் தம் மகனை ஒரு பெண்ணிடம் பிறக்கச் செய்தார். இறைவனின் அருளைப் பரிபூரணமாகப் பெற்றவராகவும், பாவத்தின் நிழல் படாதவராகவும் இருந்த அந்த பெண் ஓர் அதிசயமே.

இதோ நான் ஆண்டவரின் அடிமை; உம் சொற்படியே எனக்கு ஆகட்டும் என கூறி, அந்த ஒரு சொல், மனித குல வரலாற்றையே மாற்றியமைக்க காரணமாக இருந்த அன்னை ஓர் அதிசயமே..

இறைவனின் வார்த்தையைத் தன் இதயத்தில் இருத்தி, அதைச் சிந்தனை செய்து வாழ்ந்த ஒரு உன்னத ஆளுமை அவர். மரியாளின் கீழ்ப்படிதல் என்பது வெறும் சொல்லோடு நின்றுவிடவில்லை. அவர் கருவுற்றிருந்தபோது, தனது உறவினரான எலிசபெத் கருவுற்றிருப்பதை அறிந்து, அவருக்கு உதவி செய்ய மலைநாட்டிற்கு விரைந்து சென்றார். இது அவரது பிறர்நலச் சேவையையும் அன்பையும் காட்டுகிறது. அன்னை மரியாள் எலிசபெத்தைச் சந்தித்தபோது, மரியளின் வாழ்த்தொலியைக் கேட்டதுமே எலிசபெத்தின் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளியது. பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட எலிசபெத், □பெண்களுக்குள் நீர் ஆசீர்வதிக்கப்பட்டவர்□ என்ற வாழ்த்தைப்பெற்ற அன்னை ஓர் அதிசயமே..

திருமதி ஜேமணி வக்றர், சிங்கப்பூர்

## முள்ளிவாய்க்கால் நினைவு 2026

### முள்ளிவாய்க்கால், தமிழர் தனித்துவிடப்பட்ட சாட்சிக்கூடம்

தமிழ் மக்களை அடக்கி ஒடுக்க வேண்டும் என்பதற்காக இலங்கை அரசும், விடுதலைப் புலிகளை முற்றாக அழிக்க வேண்டும் என்பதற்காக வெளிநாட்டு சக்திகளும் முன்னெடுத்த கோர யுத்தம், எந்தவித மனிதாபிமான தார்ப்பரியங்களும் போருக்கான அறமும் இன்றி முடித்து வைக்கப்பட்ட இடம் முள்ளிவாய்க்கால்.

முள்ளிவாய்க்கால் என்பது, ஆயுதப் போராட்டத்திற்கான முடிவுரை எழுதப்பட்ட இடம் மாத்திரமல்ல, 140,000க்கும் அதிகமானவர்களை அரச படையும் அதன் வெளிநாட்டு ஆதரவு சக்திகளும், உள்ளூர் துணைக்குழுக்களும் அழித்து ஒழித்த பகுதி. 40,000க்கும் மேற்பட்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்டமைக்கான குறியீட்டுக் களம். நினைவேந்தலை மாத்திரமல்ல, நீதிக்கான கோரிக்கைகளையும் சேர்த்து வைத்திருக்கின்ற இடம், முள்ளிவாய்க்கால் ஆகும். எட்டு தசாப்தங்களை எட்டிக் கொண்டிருக்கும் சுயநிர்ணய உரிமைக்கான தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் முள்ளிவாய்க்கால் என்பது எழுச்சிக்கும் வீழ்ச்சிக்குமான அடையாளக் களம்.

போர் வலயத்துக்குள் சிக்கிய மக்களுக்கான மருத்துவ உதவி மறுக்கப்பட்டமை, உணவு வழங்கல் தடை செய்யப்பட்டமையும், ஊடக தொடர்பாடல்கள் தடைபட்டமை, இந்திய அரசியல் வாதிகள் இந்த போரை கண்டும் காணாமல் இருந்தமை என்று மனித குலத்துக்கு எதிரான அனைத்து குற்றங்களும் முள்ளிவாய்க்காலின் இறுதி நாள்களில் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டன. அதையெல்லாம், இந்த நாடுகள் அனைத்தும் எந்தவித குற்றவுணர்ச்சியும் இன்றிப் பார்த்துக் கொண்டும் இருந்தன. புலிகளை அழிப்பதற்காக, எத்தனை ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டாலும் பரவாயில்லை என்ற பல நாடுகளின் மௌனம், இலங்கை அரசு புரிந்த போர்க்குற்றங்களை விடக் கொடுமையானது.

கடந்த கால அனுபவங்களில் இருந்து, போராட்ட வடிவங்களை மாற்றிக் கொள்வதும், புதிதாக வடிவமைத்துக் கொள்வதும் போராடும் இனத்துக்கு வழக்கமானதுதான். ஆனால், போராடும் உணர்வை, முழுமையாக மழுங்கடிக்கச் செய்வதற்கான முயற்சிகளை தமிழர் தாயகம் எங்கும் விதைத்து, அதன் அறுவடைகளை தென் இலங்கையும் அதன் இணக்க சக்திகளும் தொடர்ந்தும் பெற்று வருகின்றன. மதவாதம், சாதியவாதம், பிரதேசவாதம் தாண்டி, தமிழர் தாயகம் என்கிற அடிப்படையிலேயே தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் பேரெழுச்சி கண்டது.

முள்ளிவாய்க்கால் நினைவுகளை, தமிழ் மக்களிடம் இருந்து பிரிந்தெடுப்பது என்பது தென் இலங்கைக்கும் அதன் நேச சக்திகளுக்கும் அவசரமாகக் தேவைப்படும் ஒன்று. விடுதலைப் புலிகளை அழித்தால் போதும், தமிழ் மக்களின் போர்க்குணத்தினை முற்றாக முடக்கிவிடலாம் என்று அந்தத் தரப்புக்கள் நம்பின. ஆனால், தமிழ் மக்கள், முள்ளிவாய்க்காலை போர்க்குணத்தின் ஓர்மத்தின் பகுதியாகவே மாற்றினார்கள்.

உறவுகளை நினைவுகூர மாத்திரமல்ல; அவர்களுக்கான நீதியை நிலைநாட்டவும், அவர்களின் கனவுகளை நிறைவேற்றவும் முள்ளிவாய்க்காலை ஒரு களமாக மாற்றினார்கள். அதுவும்,






தமிழர் தாயக மண்ணில், மே மாதம் 12 முதல் 18ம் திகதி வரை நிகழ்ந்த இறுதி யுத்தத்தில் இனப்படுகொலை செய்யப்பட்ட எமது உறவுகளின் ஆன்மாக்களுக்கு இறைவன் நித்திய இளைப்பாற்றியை வழங்கவும், இவர்க ளை இழந்து தவிக்கும் உறவுகளுக்கு இறைவன் ஆறுதலும் அளித்திட வேண டும் என்றும் கனடா தமிழ் கத்தோலிக்க இணையம் சார்பாக ஜெபிக்கின்றோம்.

Canda Tamil Catholic Network

https://ctcnw.org/

முள்ளிவாய்க்கால் முடிவுகளை சந்தித்து சில மாதங்களுக்குள்ளேயே அதற்கு தயாராகிவிட்டார்கள். இதனை தென் இலங்கையோ, அதன் நேச சக்திகளோ எதிர்பார்க்கவில்லை. அதனால்தான், தமிழ் மக்களின் போர்க்குணத்தின் குறியீடாக மாறிவிட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை சிதைப்பதற்காக தங்களின் ஏவல் சக்திகளை வைத்து குழப்பங்களை கடந்த காலங்களில் நிகழ்த்தின. அதைப் புரிந்து கொள்ளாது, தமிழ்த் தேசிய கட்சிகளும் வாக்கு அரசியல் என்ற குறுகிய சிந்தனைகளால் மறைமுகமாகத் துணைபோகின்றன.

இன்றைக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஏட்டிக்கு போட்டியாக தமிழ்த் தேசிய தரப்புகள் நடத்துகின்றன. அங்கு, அரச பயங்கரவாதத்தால் கொல்லப்பட்டவர்கள் நினைவு கூரப்படுவதைக் காட்டிலும், தாமே முதன்மையானவர்கள் என்கிற தன்முனைப்பு மனநிலையே வெளிப்படுகின்றது.

முள்ளிவாய்க்காலில் இழக்கப்பட்ட உயிர்களுக்கும் சிந்தப்பட்ட குருதிக்கும் நீதி கோரி போராடுதல் என்பது, எதிரிகளை தண்டிப்பதனூடாக மாத்திரம் நிகழ்வதல்ல. முள்ளிவாய்க்கால் முடிவு தமிழ் மக்கள் மீது ஏன் திணிக்கப்பட்டதோ, அதை நீக்குவதற்கு உலகளாவிய ரீதில் உள்ள ஊடகங்கள், உருமித்த உரு உள் கட்டமைப்பை உருவாக்கி, உயிரிழந்த ஆன்மாக்களின் ஆன்ம சாந்திக்கு உன்றிணைந்து நின்று போராடுவதற்கான ஓர்மத்தையும் ஒற்றுமையையும்கூட ஒருங்கிணைப்பதற்கான களமாகவும் இருக்க வேண்டும். அதுதான், உண்மையான நினைவேந்தலாக இருக்க முடியுமே தவிர வேறெதுவுமில்லை.

இன்று இலங்கை நாட்டின் ஜனாதிபதி "மேன்மை தங்கிய அநுர குமார திசாநாயக்க" அவர்களின் தலைமையிலான அரசு, முள்ளிவாய்கால் நினைவேந்தலை அனுமதித்திருப்பினும், தமிழ் மக்களின் உணர்வுகளை ஆதரிக்கின்றாரா என்பது விடை காண முடியாத கேள்வியே. இலங்கை என்பது ஒரு நாடு. ஒரு நாட்டுத் தீர்வுக்குள் தமிழ் மக்களின் உணர்வுகளையும், வலிளையும், மீண்டும் புதை குழி தோண்டிப்புதைத்து தமிழ் மக்களின் சுயநிர்ணயத்திற்கான தீர்வை தர இலங்கையின் எந்த அரசும் முயலாது என்பதும், அவ்வாறு முயல சிங்கள மக்களும் இடமளிக்க மாட்டார்கள் என்பது தான் புலரும் உண்மை. ஈஸ்ரர் குண்டு தாக்குதலின் சூத்திரதாரிகள் தமிழர்களாக இருந்திருந்தால், சட்டம் மிக வேகமாக செயல்பட்டு தாலியறுத்திருக்கும். ஆனால்......... இதிலிருந்து ஒன்றை புரிந்துகொள்ளுங்கள்: இலங்கையில் சிறுபான்மையினருக்கான தாமதமாகும் நீதி மறுக்கப்பட்ட நீதியே. "**கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் எதற்கு**"

எனவே தமிழா! உனக்கான நீதி அந்த ஆண்டவனிடமிருந்து தான் உனக்கு வரும். ஆவர் தரும் நீதி தாமதமாகலாம, ஆனால் நிட்ச்சயம் வரும்.

முள்ளிவாய்க்கால் யுத்தகளத்தில் தமது ஆருயிரை ஈர்ந்த எமது உறவுகளுக்கு இறைவன் நித்திய இழைப்பாறுதலை வழங்கவும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் மர்ம முடிச்சுக்களை வெகுவிரைவில் இறைவன் அவிழ்த்து வெளிச்சத்திற்கு கொண்டுவரவும், மரணித்த, காணாமல் ஆக்கப்பட்ட வர்களின் உறவுகளின் கண்ணீர் துடைத்து புதுவாழ்வு வழங்கவும் இறைவனிடம் வேண்டுவோம். சகோ. டேவிட் தோமஸ்



# மடுப்பதி தேவ மாதாவும் தேவன்பிட்டியும்

மன்னார் மறைமாவட்டத்தின் மருதமடு மாதாவின் திருச்சுரூபம் 16ம் நூற்றாண்டையுடையது. மருதமடு அன்னையின் திருச்சுரூபம் முதன்முதலில் 1670 ற்கு முன் மன்னார் மாவட்ட மாந்தை என்னும் பிரதேசம் மேற்கு பகுதியில் அமைந்துள்ள தேவன்பிட்டி கிராதத்தின் புனித சவேரியார் ஆலயத்திலேயே இருந்தது. 16ம் நூற்றாண்டிலே, தேவன்பிட்டி கடற்கரையில் கரை ஒதிங்கிய அந்த அற்புத மடு அன்னையின் திருச்சுரூபத்தை தேவன்பிட்டி மக்கள் பாசத்தோடும் பக்தியோடும் கவனமாக கைகளில் எடுத்து, தமது புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் கொலுவேற்றி, அன்றுமுதல் ஒல்லாந்தரின் அச்சுறுத்தல் நாள் வரைக்கும் அவளுக்கு சிரம் தாழ்த்தி வணக்கம் செலுத்தி வந்தனர்.

ஆயினும் ஒல்லாந்தர் ஆட்சி காலத்தில் கத்தோலிக்க திருஅவைக்கு எதிராக கட்டவிழ்க்கப்பட்ட கலவரத்தினால், 1670 இல் ஏழு குருக்களும், 700 கத்தோலிக்க மக்களும் சேர்ந்து மருதமடு அன்னையின் புனித சுரூபத்தை மருதமடு காட்டு பிரதேசத்திற்கு மறைவாக எடுத்துக்கொண்டு வந்து, வைத்து வணக்கம் செலுத்தி வந்தனர்.

பின் 1670 மந்தாயிலிருந்து கொண்டுவரப்பட்ட அன்னையின் திருச்சுரூபத்தை பாதுகாப்பதற்காக, கெலனா என்ற போர்த்துகீசியப் பெண்மணி முதல் மண் ஆலயத்தைக் கட்டினார். 1705 இல் கத்தோலிக்க எதிர்ப்புத் துன்புறுத்தல்களைத் தவிர்ப்பதற்காக மாறுவேடத்தில் பயணம் செய்த, புகழ்பெற்ற ஓரேட்டோரியன் மறைப்பணியாளரான புனித ஜோசப் வாஸ், இந்த ஆலயத்தைப் பார்வையிட்டுப் புதுப்பித்தார். 1876 இல் தற்போதைய, பெரிய கல் தேவாலயத்திற்கான அடிக்கல், ஆயர் கிறிஸ்டோபர் போன்ஜியனின் வழிகாட்டுதலின் கீழ் நாட்டப்பட்டது. 1944 இல் பரந்து விரிந்த இந்தக் கல் தேவாலயம், ஜுன் 25, 1944 அன்று புனிதப்படுத்தப்பட்டது.

மே 2009-இல் உச்சக்கட்டத்தை அடைந்த இலங்கை உள்நாட்டுப் போரின் (நான்காம் ஈழப் போர்) இறுதி, கொடூரமான கட்டத்தின் போது, இந்த ஆலயமும் அதன் சுற்றுப்புறப் பகுதியும், இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்களுக்கு ஒரு முக்கியமான புகலிடமாக மாறியது. 2008 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் வடக்குப் பகுதியில் கடும் சண்டை தீவிரமடைந்ததால், மடுத்திருத்தலம் பாதுகாப்பு பிரதேசம் என்ற ஆலயத்தின் அந்தஸ்து தகர்க்கப்பட்டது. 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப், 700 ஆண்டுகள் பழமையான அன்னையின் திருச்சுரூபத்தை தேவாலயத்திலிருந்து பாதுகாப்பான பகுதியான தேவன்பிட்டிக்கு மாற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவை எடுத்தார். இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சுற்றியுள்ள பகுதியில் கடும் மோதல் நிலவியது; இவ்விரு அமைப்புகளும் அருகிலேயே நிலைகளை அமைத்திருந்தன. சுற்றியுள்ள பகுதிகளில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான பரந்த அகதிகள் முகாம்கள் இருந்தன.

இந்தக் காலகட்டத்தில், பீரங்கித் தாக்குதல்களால் ஆலயத்தின் கட்டமைப்பு சேதமடைந்தது, இதனால் பழுதுபார்ப்புப் பணிகள் தேவைப்பட்டன. மோதல்கள் இருந்தபோதிலும், அந்தக் குழப்பங்களுக்கு மத்தியிலும்

இந்த ஆலயம் ஒற்றுமைக்கும் நம்பிக்கைக்கும் ஒரு மையப் புள்ளியாகச் செயல்பட்டது. பிளவுபட்ட சமூகங்களை மடுத்திருத்தலம் ஒன்றிணைத்தது. தமிழ் மற்றும் சிங்கள கத்தோலிக்கர்களாலும், இந்து மற்றும் பௌத்த பக்தர்களாலும் தனித்துவமாகப் போற்றப்படுகிறது. போரினால் பிளவுபட்ட சமூகங்களுக்கு இது ஒரு வரப்பிரசாத இணைக்கும் பாலமாக விளங்குகிறது. பின் 2009 மே மாதம், இறுதி யுத்தம் முடிந்த பின் திருத்தலம் திருச்சபையின் கட்டுப்பாட்டிற்குத் திரும்பியது. மருத மடு அன்னையின் திருச்சுரூபம் 2009 ஆகஸ்ட் மாதம் திரும்ப மருத மடு திருத்தலத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதனைத் தொடர்ந்து 2015-ல் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வருகையும் ஆலய அபிஷேகமும் 2008-2009-ஆம் ஆண்டுகளின் கடுமையான வன்முறையைத் தாங்கி நின்ற இத்திருத்தலத்தின் சிறப்பு, தமிழ் சமூகத்திற்கும் பரந்த இலங்கை கத்தோலிக்க நம்பிக்கைக்கும் மீள்திறனின் சக்திவாய்ந்த அடையாளமாக மீளவும் புனரமைக்கப்படும்போது, மடுத்திருப்பதியின் அத்தியட்ச்சகராக இருந்த தற்போது பன்னார் மறைமாவட்ட அயராக திகழும் வண. நெ்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாவம் ஆண்டகை யால் வேலாலயத்தின் புதிய டோம் கட்டப்பட்டு இன்று பதுப்பொலிவுடன் திகழ்கின்றது.

எனவே, மருதமடு அன்னை ஆரம்பத்தில் தேவன்பிட்டி புனித சவேரியார் ஆலயத்தில் பிரசன்னமயிருந்தே பின் இன்றைய மடுத்திருப்பதிக்கு வந்திருக்கிறார். எனவே எம் உலகம் முழுவதும் உள்ள தமிழ் சிங்கள மக்கள் இன்று தெரிந்துகொள்ள வேண்டிய முக்கிய விடயம் இதுவே. 2008 – 2009 வரை நடந்த இறுதி யுத்ததில் மடு அன்னையின் திருச்சுரூபத்தை பாதுகாக்க, ஆயர் அன்று தேவன்பிட்டி புனித சவேரியார் ஆலயத்தை தேர்ந்தெடுத்தமைக்கான காரணம், அன்று ஒல்லாந்தரிடமிருந்து அன்னையின் திருசசுரூபத்தை பாதுகாத்த வேவன்பிட்டி மக்களால் நிட்ச்சயமாக அன்னையை பாதுகாக்க முடியும் என்ற நம்பிக்கையில் மட்டுமே. தேவன்பிட்டி கிராம மக்களின் விசுவாசத்தையும், அவர்களது விசுவாச வீரத்தையும், வாஞ்சையையும், அன்னையின் மீது அவர்களுக்கிருநத ஆழமான பாசம், நம்பிக்கையையும நாம் இன்று பாரட்டவும், பின்பற்றவும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இந்த வேளையில் தேவன்பிட்டி மக்களிடம் நான் கேட்டுக்கொள்வது ஒன்றே: நீங்கள் உலகின் எந்தப்பகுதியில் இருப்பினும், உங்களுடைய மூதாதையருக்கும் மடு அன்னைக்கும் இடையில் ஆரம்பத்தில் இருந்த அந்த அன்னியொன்னிய உறவு குறித்து தகவல்கள் ஏதும் இருப்பின், இனிவரும் மாதங்களில் வெளிவரும் எமது "அன்பு மக்களே சஞ்சிகையில் வெளியிட்டு, பலருடைய விசுவாச எழுச்சிக்கு வழி சமைக்க தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன். (தொடர்பு:தோலைபேசி:1(647)852-3141/ Email : tamilcatholicpublication@gmail.com).

2009 மே மாதத்தில் முடிந்த இறுதி யுத்தம், வணக்க மாதா மாதத்தையும் மடு அன்னையையும் இணைத்த அந்த அற்புதத்தை நினைத்து எங்கள் இதயம் பேருவகை கொள்கிறது. மடு அன்னைக்கு வருடத்தில் இருமுறை பெருவிழாக்களும், ஒவ்வொரு மாதமும் சிறப்பு விழாவும் எடுக்கின்றோம். இனிவரும் காலத்தில் மே மாத தேவன்பிட்டி பூர்வீக மடுமாதா பெருவிழா எடுக்க வேண்டும். இந்த மூன்றாவது விழா வணக்க மாதா மாதமாகிய மே மாதத்தில் கொண்டாடப்பட வேண்டும். இந்த விழாவில், மடு அன்னையின் ஆரம்ப கால மக்களிடம், தேவன்பிட்டிக்கு, அன்னையை பவனியாக கூட்டிச்சென்று, அங்கே சில நாட்களாவது வைத்து வணக்கம் செலுத்தவும், இறுதி யுத்தத்தில் இறந்தவர்களுடைய ஆன்ம இழைப்பாற்றிக்காகவும் காணாமல் ஆக்கப்பட்டவரகளுக்காகவும், இவர்களுடைய பிரிவால் துயரத்தில் ஆழ்ந்திருப்பவர்களுக்காகவும் அன்னை வழி ஆண்டவரிடம் ஜெபிக்கும் மிகப்பிரமாண்ட நாளாகவும் திரு அவை பிரகடனப்படுத்த வேண்டும் என்றும் விரும்புகின்றோம்.

வரலாறு கூறும் உண்மை: அரசியல் அனாதைகளாக கைவிடப்பட்ட போதெல்லாம், எமது வட வட கிழக்கு தமிழ் மக்கள் பலர் மடுப்பதியில் மடுஅன்னையை சுற்றி, அவளின் தாய்மையின் நிழலின் கீழ், அவளது ஒரே ஒரு அரவணைப்பிலே மட்டுமே வாழ்ந்தார்கள். இன மத பேதமின்றி தமது ஆருயிர்களையும், தமது குழந்தைகளின் உயிர்களையும், உடமைகளையும் பாதுகாக்க அவளிடம் தஞ்சம் புகுந்தார்கள். மடு அன்னை தனது அன்பு தாய்மையின் அரவணைப்பில் கோழி தன் இறக்கைகளின் நிழலில் தன் குஞ்சுகளை காப்பது போல், உயிர் காத்தாள். இலங்கையில் மடு அன்னையின் தாய்மையை போற்றாத நாவு உண்டோ??????

**மரியதாசன்**




பரிசுத்த பரம திரித்துவம் என்பது ஒரே ஒரு கடவுள், மூன்று தெய்வீக ஆட்கள்; பிதா, சுதன், பரிசுத்த ஆவியானவர். ஆயினும், மூன்று கடவுள்கள் இல்லை. இங்கு அனைவரும் சமன். பிதா முதல் தெய்வீக ஆள்; சுதன் இரண்டாம் தெய்வீக ஆள், நித்தியத்திலிருந்து பிதாவின் இயல்பிலிருந்து பிறந்தவர்; பரிசுத்த ஆவியானவர் மூன்றாம் தெய்வீக ஆள், பிதா மற்றும் சுதன் புறப்பட்டவர். இந்த பரம திரித்துவ உண்மை புரிந்து கொள்ள அல்ல, மாறாக எம்மை கிறிஸ்தவ வாழ்வில் செதுக்கிக்கொள்ள.

**இன்று மனிதர்கள் வாழும் இடங்களில் எல்லாம் பிழவு, ஒற்றுமையின்மை, மற்றும் பெரிதுபடுத்தும் குறை குற்றங்கள். இன்றைய குடும்ப வாழ்வும் இதற்கு விதிவிலக்கல்ல. இன்று இலங்கையின் நீதிமன்றங்களில் காணப்படும் தாபரிப்பு வழக்குகள் இதற்கு ஒரு பெரிய சான்று. கணவன் மனைவி கூட ஒற்றுமையாக வாழ முடியாத காலம். குடும்பம் என்ற கூட்டின் வாரிசுகள் சிறகடித்து சென்று தம்மைத்தாமே சிதைத்துக்கொண்டிருக்கும் காலம். கணவன் மனைவி பிரமாணிக்கமின்மை, அவர்களின் முன்னுதாரண வாழ்க்கையின்மை, சண்டை, சச்சரவு, இன்று பிள்ளைகளின் குடும்ப வெளிநடப்பிற்கும், ஒழுக்கமன்மைக்கும், தீய பழக்கவழக்கங்களுக்கும், குடி, போதைவஸ்து கலாச்சாரத்திற்கும் காரணமாகின்றது. இன்று பலம்பேர்ந்து வாழும் எமது புலம்பேர் தமிழர்களுடைய சில குடும்பங்கள் குறித்த தரவுகள் தரம்கெட்டிருப்பதையும் ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.**

இந்த வேளையில், இவ் பரம திரித்துவ விழாவின் உண்மை ஆன்மீகம் இவ்வுலகின் ஒவ்வொரு மனிதனுக்கும், ஒவ்வொரு குடும்பங்களுக்கும், ஒவ்வொரு குழுமங்களுக்கும் அடி அஸ்திவாரமாக அமைய வேண்டும். ஒரு கடவுள் மூன்று ஆட்கள், மூன்று கடவுள் அல்ல, ஒரு கடவுள். ஒருவரும் ஒருவருக்கு ஒருவர் பெரியவரும் அல்ல, சிறியவர்களும் அல்ல. மூவருமே ஒருவருக்கொருவர் சமமானவர்கள்.

இந்த கோட்பாடு இன்றைய போட்டி பொறாமை நிறைந்த மனித சமூகங்கள் எதிலுமே காணப்படாதது, காணப்பட முடியாதது. ஆனால் காணக்கிடப்பது எமது பரம தரித்துவ கடவுள் குடும்பத்திலே. ஆகவே கத்தோலிக்க மக்களாகிய நாம் இந்த பரம திரித்துவ வாழ்வு முறையை உள்வாங்க வேண்டும். பரம திரித்துவ வாழ்வு முறை எம் மாதிரியாக வேண்டும். பரம திரித்துவ வாழ்வு முறை எமது குடும்பங்களை, சமூக அமைப்புக்களை வழிநடத்த தம்மை பரம திரித்துவ வாழ்வு முறைக்கு தம்மை ஈடுபடுத்த வேண்டும்.

புரம திரித்துவம் எவ்வாறு வண்ணில் ஒற்றுமையாக, கீழ்படிவோடு, அமைதியாக வாழ்கின்றது என்பதை, பரம திரித்துவத்தின் இரண்டாம் ஆள், "சுதன்" இப்பூமில் எண்பித்துக்கட்டிச்சென்றார். "கடவுள் தன்மையில் விழங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை விடாமல் பிடித்துக்கொண்டிருக்க வேண்டியதொன்றாக கருதவில்லை. அடிமையின தன்மை பூண்டு, மனிதனாக பிறந்தார்". மனித தாய் தந்தையர்களுக்கு கீழ்படிந்திருந்தார். தனது பணிவாழ்வின் ஆரம்பத்திலேயே, "ஆண்டவருடைய ஆவி என்மேல் உளது; ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வைபெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை, முழக்கமிட்டு அறிவிக்கவும், அவர் என்னை அனுப்பியுள்ளார்" என்ற பரம திரித்துவத்தின் இரண்டாம ஆளாகிய சுதனாகிய கடவுள் தனது அழைப்பை மழுமையாக நிறைவேற்றினார் (லூக்.4)

ஆறத்திற்கும், மறத்திற்கும், தரத்திற்கும் பேர் போனவர்கள் எமது கடவுள். பிதாவின் படைப்பும், சுதனின் இறப்பும், பரிசுத்த ஆவியின் பாதுகாக்கும் நெருப்பும் அறங்களில் எல்லாம் மேலான அறம். எனவே, எமது பரம திரித்துவ கடவுள் எம் குடும்பங்களின், மனித குழுமங்களின் மாதிரியாக ஆமையட்டும். எங்கும் எதிலும் அமைதி ஒற்றுமை, அன்பு சமாதானம் சமதள நீதி பெருகட்டும். புது வாழ்வு மலரட்டும்.

**இருதயநாதன் தோமஸ்**

# புனிதர் யூஜின் டி மசெனேட் அமலமரித்தியாகிகள் ஸ்தாபகர்



21.05.2026

புனிதர் யூஜின் டி மசெனேட், ஒரு பிரெஞ்சு கத்தோலிக்க குரு ஆவார். இவருக்கு 1975ம் ஆண்டு, ஒக்டோபர் மாதம், 19ம் திகதி, திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்களால் அருளாளர் பட்டமும், 1995ம் ஆண்டு, டிசம்பர் மாதம், 3ம் திகதியன்று, திருத்தந்தை இரண்டாம் ஜோன் பவுல் அவர்களால் புனிதர் பட்டமும் வழங்கப்பட்டது.

யூஜின் டி மசெனேட் பிரான்சில் பிரபுக் குடும்பம் ஒன்றில் பிறந்தார். இவரது தந்தை பெயர் □சார்ள்ஸ்□ (Charles Antoine de Mazenod) ஆகும். இவரது தாயார், □மேரி ரோஸ்□ (Marie Rose Joannis) ஆவார். கி.பி. 1790ம் ஆண்டு ஏற்பட்ட பிரான்ஸ் புரட்சியை அடுத்து, புரட்சியாளர்களின் வற்புறுத்தலால் தமது குடும்பத்தினருடன் இத்தாலி நாட்டுக்கு புலம்பெயர்ந்து சென்றார். 1808ம் ஆண்டு குரு மடத்தில் இணைந்து இறையியல், மெய்யியல் கல்விகளைக் கற்று கி.பி. 1811ம் ஆண்டு, டிசம்பர் மாதம், 21ம் திகதி குருத்துவ அருட்பொழிவு பெற்றார்.

## அமலமரி தியாகிகள் (Oblates of Mary Immaculate, in short - OMI) சபை உருவாக்கல்:

ஏழைகள் வாழும் சேரிப்புறம், வைத்தியசாலை, சிறைச்சாலை போன்ற இடங்களில் சென்று பணியாற்றினார். தனது பணியின் தேவையை உணர்ந்த இவர் ஒரு புதிய சபையை உருவாக்கினார். கி.பி. 1816ம் ஆண்டில் □மிகவும் கைவிடப்பட்டவர்களுக்கான குழு□ (Group for most abandoned of Provence) என்ற பெயருடன் புதிய குழுவாக மறை மாவட்டத்தால் அதிகாரபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதில் 5 குருக்கள் மாத்திரமே இருந்தார்கள்.

கி.பி. 1826ம் ஆண்டு பெப்ரவரி 17ம் நாள் இக்குழுவின் பெயர் □அமலமரியின் மறைபரப்புத் தியாகிகள்□ (Missionary Oblates of Mary Immaculate) என மாற்றப்பட்டது. கி.பி. 1832ம் ஆண்டு இவர் மார்செயில் ஆயராக பதவி உயர்வு பெற்றார்.

## இலங்கையில் அமலமரியாளின் தியாகிகள்:

கி.பி. 1847ம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை கத்தோலிக்கத் திருச்சபை பெரும் சவால்களை எதிர்நோக்கியது. அவர்களின் பணியின் தேவை அதிகமாக காணப்பட்டது. இதனால் அங்கு குருக்களின் தேவையும் அதிகரித்தது. அப்பொழுது இருந்த ஆயர் ஒராசியோ பெற்றக்கினி குருக்களைத் தேடி ஐரோப்பா சென்றார். பிரான்ஸில் அவர் ஆயர் யூஜினை சந்தித்து, அவரை இலங்கையில் பணியாற்ற சில குருக்களை அனுப்புமாறு கேட்டுக் கொண்டார்.

இதனை ஏற்றுக் கொண்ட யூஜின் டி மசெனோட் மூன்று அமலமரியாளின் தியாகிகளை இலங்கைக்கு அனுப்ப முன்வந்தார். முதன் முதலில் கி.பி. 1847ம் ஆண்டு, நவம்பர் மாதம், 28ம் தேதி, அருட்தந்தை செமேரியாவின் தலைமையில் மூன்று அமலமரியாளின் தியாகிகள் தென்னிலங்கையின் காலி துறைமுகத்தை வந்தடைந்தார்கள். இவர்கள் அங்கிருந்து கி.பி. 1848ம் ஆண்டு, பெப்ரவரி மாதம், 4ம் திகதியன்று, வடக்கே மன்னார் வந்தடைந்தார்கள். பின் ஊர்காவற்றுறை சென்றார்கள். அமலமரியாளின் தைக் கட்டினார். இவர், 1852ம் ஆண்டு, உள்ளூர் கத்தோலிக்க குருவான "ஜோசப்-மரி டிமோன்-டேவிட்" (Joseph-Marie Timon-David) என்பவரை மார்செய்ல் (Marseille) நகரில், இயேசுவின் திருஇருதய சபை (Congregation of the Sacred Heart of Jesus) நிறுவிட ஊக்குவித்தார்.தியாகிகளின் பணி யாழ்ப்பாணத்திலும் ஆரம்பமாகி விரிந்தது. அமலமரியாளின் தியாகிகளே 1862ம் ஆண்டு, திருக்குடும்ப கன்னியர் சபையினரை இலங்கைக்கு அழைத்து வந்தார்கள். தமிழ் பாரம்பரியத்தில் பாட்டி வைத்தியம் சிறந்தது போல, இலங்கை திருச்சபை கத்தோலிக்க விசுவாசத்திற்கு அமலமரித்தியாகிகள் சபையின் பணி வைத்தியம் எங்கள் அன்னைக்கும் எமக்குமான உறவை மிக அன்னியொன்னியமக்கிய அரும்மருந்து. அவர்கள் பணி சிறந்தோங்கி எமது ஜெபங்கள்




பல நூற்றாண்டுகளாக, மே தினம் என்று அழைக்கப்படும் மே 1, ஐரோப்பாவில் ஒரு பாரம்பரிய வசந்தகாலப் பண்டிகைத் திகதியாகக் கொண்டாடப்பட்டது. தொழிற்புரட்சி சமூகத்தின் முகத்தை மாற்றியபோது, தொழிற்சங்கங்களும் அரசியல் ஆர்வலர்களும் தொழிலாளர்களுக்காக வாதிடுவதற்கான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்யும் ஒரு திகதியாகவும் மே 1 ஆனது. இந்த நாள் சர்வதேச தொழிலாளர் தினம் என்று அறியப்பட்டது, மேலும் இது குறிப்பாக கம்யூனிஸ்ட் நாடுகளில் பிரபலமாக உள்ளது.

**புனித சூசையப்பருக்கு** பங்குனி 19 அன்று ஒரு பாரம்பரியத் திருவிழா நாள் உள்ளது, ஆனால் ஒரு காலத்தில், திருஅவை ஈஸ்டரின் இரண்டாம் வாரத்திலும் **புனித சூசையப்பரை** கௌரவித்து வந்தது. 1955-ல், திருத்தந்தை பன்னிரண்டாம் பயஸ் அவர்களால் நிறுவப்பட்ட இந்தத் திருவிழா, பல நாடுகள் தொழிலாளர் தினத்தைக் கொண்டாடும் திகதியுடன் குறிப்பிடத்தக்க வகையில் ஒத்துப்போகிறது. இது ஒரு தற்செயல் நிகழ்வல்ல, மாறாக, **புனித சூசையப்பரின்** தாழ்மையான மற்றும் அமைதியான உருவத்தின் வழியாக உழைப்பின் கண்ணியத்தையும் மதிப்பையும் உணர்ந்து, விசுவாசத்தின் கண்களால் உழைப்பு உலகத்தைப் பார்க்க ஒரு ஆழமான அழைப்பாகும்.

இந்தத் திருவிழா, **புனித தொழிலாளி சூசையப்பரின்** திருவிழாவாக மாற்றப்பட்டு, தொழிலாளர்கள் மற்றும் கைவினைஞர்கள் மீதான புனித சூசையப்பரின் ஆதரவை முன்னிலைப்படுத்தும் வகையில் நிரந்தரமாக மே 1-க்கு மாற்றப்பட்டது. இயேசுவைப் பற்றி சிந்திக்கும்போது, கிறிஸ்தவர்கள் அவருடைய தெய்வீகத்தில் கவனம் செலுத்தி, இயேசு நம்முடன் மனிதத்தன்மையைப் பகிர்ந்துகொண்ட வழிகளை மறந்துவிடுவது எளிது. **புனித சூசையப்பர்** ஒரு தச்சராக இருந்தார், மேலும் கடின உழைப்பு, நுணுக்கமான கவனம், பொறுமை மற்றும் விடாமுயற்சி ஆகியவற்றைக் குறிக்கும் அதே தொழிலில் இயேசு தனது வளர்ப்புத் தந்தையால் உருவாக்கப்பட்டார் என்று நமது பாரம்பரியம் கூறுகிறது.

அதிகம் சம்பாதிக்காத ஒரு கைவினைஞராக, **புனித சூசையப்பர்** தன் குடும்பத்தைக் கவனித்துக்கொண்டார். உதாரணமாக, அவர்கள் ஆலயத்திற்குச் சென்றபோது, பெரிய பலி கொடுக்க வசதியில்லாதவர்களுக்கான ஒரு சலுகையாக, **புனித சூசையப்பர்** இரண்டு புறாக்களைப் பலியிட்டார். ஆயினும்கூட, **புனித சூசையப்பர்** விசுவாசத்தால் நிறைந்திருந்தார். ஏன் என்று புரியாதபோதும், மரியன்னையையும் இயேசுவையும் கவனித்துக்கொண்டதில் தேவதூதர்களின் தூண்டுதல்களுக்கு அவர் உடனடியாகப் பதிலளித்தார். அவர் அன்பாலும் நிறைந்திருந்தார்—மரியாள் மீது அவநம்பிக்கை தோன்றியபோதும், அவர் அவள் மீது மென்மையான பரிவு கொண்டிருந்தார், மேலும் இயேசுவைத் தன் சொந்த மகனாக நேசித்தார். இயேசுவுக்காக தானே செய்த தொட்டிலின் துண்டுகளை இன்றும் நாம் இத்தாலியின் உரோம் நகரில் உள்ள சாந்தா மரியா மாகியோரே (புனித மேரி மேஜர்) பேராலயத்தில் காணலாம்.

இன்று கிறிஸ்தவ குடும்பங்களில் வாழும் கணவர்கள் **புனித சூசையப்பரை** போல், நீதிமான்களாகவும், மனைவியரை எந்நிலையிலும் மனித மாண்போடும் மரியாதையோடும் நடத்தவும் **புனித சூசையப்பரிடம்** அனைத்து கணவர்களையும் ஒப்படைத்து மன்றாடுவோம். **தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித சூசையப்பரே, மனித உழைப்பின் மாண்புக்கு இலக்கணமாகத் திகழ்பவரே—எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!**

**ஒகஸ்ரின் அன்ரனி**




அன்னை அனைத்து உயிர்களுக்கும் ஆதாரமானவள். ஈரைந்து மாதங்கள் கருவில் சுமந்து, உதிரத்தைப் பாலாக்கி ஊட்டி, தன்னலமற்ற அன்பை வழங்கும் அன்னையைப் போற்றும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் மே மாதம் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமை அன்னையர் தினம் உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.

□மாதா, பிதா, குரு, தெய்வம்□ என்று நமது முன்னோர்கள் போற்றுகின்றனர். இதில் தெய்வத்திற்கும் முன்பாக அன்னைக்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. ஈடு இணையற்ற அன்பின் ஊற்றாக, தியாகத்தின் வடிவமாகத் திகழும் தாயைப் போற்றும் உன்னத நாளே அன்னையர் தினமாகும். ஒரு குழந்தையின் முதல் ஆசிரியர் தாய். தன் பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகத் தனது சொந்த ஆசைகளையும் கனவுகளையும் தியாகம் செய்பவள். பசி அறியாமல் உணவளித்து, சோர்வடையும் போது ஊக்கமளித்து, நோய்வாய்ப்படும் போது கண்ணீரும் கம்பலையுமாக அருகில் அமர்ந்து கவனிக்கும் கருணையின் வடிவம் தாய். ஒரு குடும்பத்தின் அச்சாணியாக இருந்து அனைவரையும் ஒருங்கிணைத்து வழிநடத்துபவள் அவளே.


நவீன அன்னையர் தினம் 18 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியாவில் தொடங்கியது. அக்காலத்தில், தவக்காலத்தின் நான்காவது ஞாயிற்றுக்கிழமையன்று, தங்கள் சொந்த ஊரிலிருந்து குடிபெயர்ந்தவர்கள், தங்கள் தாய் தேவாலயத்திற்குத் திரும்பி, கன்னி மரியாளை வழிபடுவார்கள் (இது அன்னையர் தினத் திருவிழா□ என்று அழைக்கப்பட்டது).

மேலும், தங்கள் குடும்பத்தினருடன் மதிய உணவை உண்டு மகிழ்வார்கள். அக்காலத்தில் 'அன்னையர் தின ஞாயிறு என்று அழைக்கப்பட்ட அந்த நாளில், ஒவ்வொரு தாயும் விருந்தின் ராணியாக அறிவிக்கப்பட்டு, ரோஜா பூவை ஒத்த கராம்பு வாசனையுள்ள கொய் மலர் செண்டு கொடுத்து கௌரவிப்பார்கள். இந்த கொய் மலரானது, கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின்போது அன்னை மரியாளின் கண்ணீர் சிந்திய இடத்தில் கொய் மலர்கள் (கார்னேஷன் மலர்கள்) பூத்தன என்றும், அது அவருடைய நித்திய தாய் அன்பின் சின்னம் என்றும் ஒரு கிறிஸ்தவ நம்பிக்கை உள்ளது.

பின் ஜனாதிபதி வூட்ரோ வில்சன் 1914-ல் அன்னையர் தினத்தை அமெரிக்காவின் தேசிய விடுமுறையாக அறிவித்தார். அது எப்போதும் மே மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையில் கொண்டாடப்படும் என்று அறிவித்தார். பிரித்தானியாவில் ஆரம்பித்த இந்த அன்னையர தினம், பின்னர் அமெரிக்காவிலும், பின்னர் இன்று அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்படுவதற்கான காரண கர்த்தா யார் எனில், அவர் தான் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த பெண்மணி ஜார்விஸ்.

ஜார்விஸ் என்ற அமெரிக்க பெண்மணி, உள்நாட்டுப் போர் கால சமூக ஆர்வலரான ஆன் ரீவ்ஸ் ஜார்விஸ் என்ற தனது அன்புத் தாயை இழந்த பிறகு, அதிகாரப்பூர்வ அன்னையர் தினத்திற்காகப் பிரச்சாரம் செய்யத் தொடங்கினார். உலகில் வேறு யாரையும் விட உங்களுக்காக அதிகம் வாழ்ந்த நபரை கொண்டாடுமாறு தனது நாட்டை ஊக்குவிக்கத்தார். அன்று முதல் இன்று வரை உலகம் முழுவதும் இது ஒரு முக்கிய விழாவாகக் கொண்டாடப்படுகிறது. அன்னையர் தினத்தன்று மக்கள் தங்கள் தாய்க்குப் பிடித்த பரிசுகள், மலர்க்கொத்துகள், மற்றும் வாழ்த்து அட்டைகளை வழங்கி மகிழ்விக்கின்றனர். சமூக வலைதளங்கள் மூலமாகவும் தங்களது நன்றியையும் அன்பையும் வெளிப்படுத்துகின்றனர். எனினும், பரிசுகளை விட தாயிடம் காட்டும் அன்பும் மரியாதையுமே அவளுக்குத் தரும் ஆகச்சிறந்த பரிசாமாகும். அன்னையர் தினம் என்பது ஒரு நாளில் மட்டும் கொண்டாடப்பட வேண்டிய ஒன்றல்ல. தாய் என்பவர் எப்போதும் கொண்டாடப்பட வேண்டியவள், தினமும் மதிக்கப்பட வேண்டியவள். 'தாயிற் சிறந்த கோயிலும் இல்லை' என்ற பழமொழிக்கேற்ப, வாழ்நாள் முழுவதும் அன்னையைக் கண்ணியமாக நடத்துவதும், அன்பால் அரவணைப்பதும் ஒவ்வொரு பிள்ளையின் தலையாய கடமையாகும்.

**திருமதி பாபு மாலா, முல்லைத்தீவு**




## திருத்தந்தையின் முதல் திருமடல் மே 25-ல் வெளியீடு!

### உன்னத மனிதமாண்பு (Magnifica humanitas)

மே 25, திங்களன்று, செயற்கை நுண்ணறிவு (AI) காலத்தில் மனித மாண்பைப் பாதுகாப்பது குறித்த திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களின் உன்னத மனிதமாண்பு (Magnifica humanitas) என்ற முதல் திருமடல் வெளியிடப்பட உள்ளது. இத்திருமடல், திருத்தந்தை பதின்மூன்றாம் லியோ அவர்களின் ரேரும் நோவாரும் திருமடலின் 135-வது ஆண்டு நினைவாக, மே 15-ஆம் திகதியிட்ட திருத்தந்தை அவர்களின் கையொப்பத்துடன் இத்திருமடல் வெளியாகிறது.

உன்னத மனிதமாண்பு (Magnifica humanitas) திருமடல் வெளியாகும் அதே நாளில் முற்பகல் மணி 11:30 க்கு வத்திக்கானில் உள்ள ஆயர்கள் மாமன்ற அரங்கில் பொதுமக்களுக்கு முறைப்படி அறிமுகப்படுத்தப்படும். திருத்தந்தை முன்னிலையில் நடைபெறவுள்ள இவ்வெளியீட்டு நிகழ்வில், நம்பிக்கைக் கோட்பாட்டிற்கான திருப்பீடத்தின் தலைவர், விக்டர் பெர்னாண்டஸ் மற்றும் ஒருங்கிணைந்த மனித வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான திருப்பீடத்தின் தலைவர் மைக்கேல் செர்னி, பிரிட்டனின் தர்காம் பல்கலைக்கழக இறையியல் துறைப் பேராசிரியர் அன்னா ரோலண்ட்ஸ், ஆந்த்ரோபிக் (Anthropic) நிறுவனத்தின் இணை நிறுவனரும், செயற்கை நுண்ணறிவின் விளக்கத்தன்மை குறித்த ஆராய்ச்சித் தலைவருமான கிறிஸ்டோபர் ஓலா மற்றும் அமெரிக்காவின் சாண்டா கிளாரா பல்கலைக்கழக இயேசு சபை இறையியல் கல்லூரி பேராசிரியர் லியோகாடி லுஷோம்போ I.T. ஆகியோர் உரையாற்றுவர்.

திருப்பீடச் செயலர் கர்தினால் பியத்ரோ பரோலின் அவர்கள் நிறைவுரையாற்றுவார்; அதனைத் தொடர்ந்து திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் உரையாற்றித் தனது திருத்தூது ஆசிரை வழங்குவார்.

## பெல்ஜியம் மருதமடு சிற்றாலய திறப்புவிழா



பெல்ஜியம் நாட்டடில் அமைந்துள்ள மருதமடு அன்னை குடியிருக்கும் பெனு அன்னை திருத்தலத்தில் அமைக்கப்பட்ட மருதமடு அன்னை சிற்றாலய திறப்புவிழா வைகாசி 09ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

நெதர்லாந்து தமிழ் கத்தோலிக்க பணியகத்தின் ஏற்பாட்டில் பணியக இயக்குநர் அருட்தந்தை ஜோ அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜோசப்தாஸ் ஜெபரட்ணம் அவர்கள் கலந்து சிற்றாலயத்தை ஆசீர்வதிக்க லியெச் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை எரிக் டி பியூக்லேர் மற்றும் அருட்தந்தை ஜோசப்தாஸ் ஜெபரட்ணம் ஆகியோர் இணைந்து சிற்றாலயத்தை திறந்துவைத்தனர்.




## திருத்தந்தை பிரான்சிஸின் ஆன்மீக மரபைப் போற்ற புதிய கல்வி நிறுவனம்!-(20.05.2026)

கனடாவின் ஒண்டாரியோவிலுள்ள தூய ஜெரோம் பல்கலைக்கழகம், மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் போதனைகளையும் தொலைநோக்குப் பார்வையையும் போற்றும் வகையில் ‘திருத்தந்தை பிரான்சிஸ் நிறுவனம்’ (Pope Francis Institute) என்ற புதிய அமைப்பைத் தொடங்கியுள்ளது.

கனடாவின் தூய ஜெரோம் பல்கலைக்கழகம், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பணிகளையும் போதனைகளையும் முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் திருத்தந்தை பிரான்சிஸ் நிறுவனம் என்ற புதிய கல்வி அமைப்பைத் தொடங்கியுள்ளது. இத்தகைய நோக்கத்தில் தொடங்கப்பட்ட முதல் நிறுவனம் இதுவாகும். மறைந்த திருத்தந்தையின் வழிகாட்டுதல்களை அடிப்படையாகக் கொண்டு, பல்வேறு பாடநெறிகள், கருத்தரங்குகள், ஆன்மீகப் பயிற்சிகள் மற்றும் உருவாக்கத் திட்டங்களை இந்நிறுவனம் செயல்படுத்தவுள்ளது.




**கடந்த 17.05.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று அயர்லாந்து நாட்டில் பல்வேறு இடங்களில் ஒரே நேரத்தில் 586 செபமாலைப் பேரணிகள் நடைபெற்றன.**

‘‘அயர்லாந்திற்கு பற்றிமா தேவை’’ எனும் அமைப்பினால், அயர்லாந்து தேசத்தின் மனந்திரும்புதலுக்காகவும், அதிகரித்து வரும் கருக்கலைப்பு, ஓரினச் சேர்க்கை போன்ற பாவங்களுக்குப் பரிகாரமாகவும் இந்த செபமாலைப் பேரணிகள் நடத்தப்பட்டன. பற்றிமா அன்னையின் பதாகைகளைச் சுமந்து, செபமாலை செபித்து, மிகுந்த பக்தியுடன் ஆயிரக்கணக்கான மக்கள் இந்த செபமாலைப் பேரணிகளில் கலந்துகொண்டனர்.

தற்காலத்தில் கத்தோலிக்க மக்கள் முதலாய்த் தங்கள் வேத அனுசாரத்தை அலட்சியமாக ஒதுக்குகிறார்கள். ஒழுக்கக் கேடு விளைவிக்கும் நவீன கேளிக்கைகள் மலிந்து விட்டன. பசாசின் ஆதிக்கம் பூமியில் வரவேற்கப்படுகிறது. பாவம் செய்வது சர்வ சாதாரணமாகி விட்டது. தேவமாதா நம்மேல் கொண்ட தாயன்பால் தூண்டப்பட்டு, பற்பல இடங்களில் 19-ம் நூற்றாண்டிலும், சிறப்பாக 20-ம் நூற்றாண்டில் (1917) பற்றிமா பதியிலும் தோன்றி நம்மைக் கெஞ்சிக் கேட்கிறார்கள், எச்சரிக்கிறார்கள். தன் திருக்குமாரனின் திரு இருதயத்தை மேலும் பாவத்தால் நோகப் பண்ண வேண்டாம் என்று விண்ணப்பிக்கிறார்கள்.

இந்நிலை மாற மக்கள் செபமாலை செபிக்க வேண்டும், முதல் சனிக்கிழமை பக்தியை கடைப்பிடிக்க வேண்டும், உத்தரியம் அணிந்திருக்க வேண்டும், தவ முயற்சிகளை விருப்பத்துடன் செய்ய வேண்டும், நல்ல கிறீஸ்தவ வாழ்க்கை வாழ்வதில் ஏற்படும் சிலுவைகளை நம் பாவப் பரிகாரமாக ஏற்றுக்கொண்டு, உத்தம மக்களாய் வாழ வேண்டும், அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள். இந்தப் பற்றிமா செய்தியை அயர்லாந்து தேசம் முழுவதும் பரப்பும் உன்னதமான பணியை ‘‘அயர்லாந்திற்கு பற்றிமா தேவை’’ எனும் அமைப்பு சிறப்பாகச் செய்து வருகிறது. அவர்களுக்கு எமது பாராட்டுக்கள்!

## உலகளாவிய திருஅவை மாநாடு 2028



2028 அக்டோபர் மாதத்தில் வத்திக்கானில் நடைபெறவுள்ள உலகளாவிய திருஅவை மாநாட்டிற்கான வழிகாட்டி நெறிமுறைகளை மாமன்றப் பொதுச்செயலகம் வெளியிட்டுள்ளது.இதன் அடிப்படையில் உள்ளூர் திருஅவைகளும் ஆயர் பேரவைகளும் நினைவு கூர்தல், விளக்குதல், திசைப்படுத்துதல் மற்றும் கொண்டாடுதல் ஆகிய நான்கு நிலைகளின் வழியே



**பேசாலை மண்ணின் மைந்தனும், மூத்த குருவுமாகிய அருட்தந்தை பத்திநாதன் ஜெறோம் லெம்பேட் (அமதி ) அடிகளார் 20.05.2026 அன்று இறைவனடி எய்தினார்.** அருட்தந்தையின் இறுதிச்சடங்கு 22.05.2026 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

அருட்தந்தையின் துறவற வாழ்வுக்காக கடவுளுக்கு நன்றி கூறுவதோடு, தந்தையின் கலைப் பணியையும், சமூக சேவைகளையும், மறை போதகங்களையும் கண்ணீரோடு நினைந்து, இவ் பேராற்றல் கொண்ட மறை மைந்தனை தந்த இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம். மறையுரை மன்னன், இறைவனின் புகழையும், அன்னை மரியாளின் புகழையும் உலகறிய தனது சிறந்த மறையுரை ஆற்றலால், சிறந்த முறையில் சாட்சியம பகன்றவர். துணை செய்ய வருவாய் எம் தாயே. துடிக்கும் எம் மக்களை கடைக்கண் பாராய். என்ற பாடலும், காயமே இது பொய்யடா..வெறும் காற்றடைத்த பையடா..என்ற அவரது பிரசங்க வரிகளும், அருட்தந்தை அவர்களின் எம் மனதில் ஆழ பதிய செய்துவிட்டது

நிகழ்வுகள்: அருட்தந்தையின் உடல், மே 22, வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணி வரை யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, சுவாமியார் வீதியில் உள்ள டி மஸெனேட் ( De Mazenod Chapel) தேவாலயத்தில் வைக்கப்பட்டு, பின் அங்கிருந்து பிற்பகல் 3. 00 மணிக்கு இறுதித் திருப்பலிக்காக யாழ்ப்பாணம், புனித மரியாள் பேராலயத்திற்கு (St.Mary’s Cathedral - Jaffna) எடுத்துச் செல்லப்பட்டு, அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் புனித மரியன்னை சேமக்காலையில் (St.Mary’s Cemetery) நல்லடக்கம் செய்யப்படும். கனடா தமிழ் கத்தோலிக்க இணையம் ஆழ்ந்த இரங்கலுடன், அருட்தந்தையின் ஆன்ம ஈடேற்றத்துக்காக பிரார்த்திக்கின்றது.

# St.Anthony visits Toronto and Hamilton



## The Saint of the Miracles Among Us

This year, the June 13 Antonian Days will be held from Friday, June 5, to Monday, June 15. Franciscan friar Father Mario Conte of the Pontifical Basilica of Saint Anthony in Padua and editorial director of the Messenger of Saint Anthony will bring two first-class relics from the saint's basilica to the Archdiocese of Toronto and the Diocese of Hamilton. Both reliquaries contain a physical part of the saint: During his visit, Father Conte will travel to several churches across Toronto and Hamilton.

### MASSES AND VENERATION

**Friday, June 5**
St. Anthony of Padua parish. 940 North Park Drive, Brampton ONL6S 3LS-Tel: 905 793-8030 stanthonyofpadua.ca Mass: 7:00pm; Veneration: from 1:00pm to 9:00pm

Saturday, June 6
Guardian Angel Parish 10630 Creditview Road, Bramptoti ON L7A 0T4-Tel: 905 970-9175 guardianangelsbr.archtoronto.org Mass: 5:00pm: Veneration. from 1:00pm to 7.00pm

Monday, June 8
St. Anthony's Parish 1037 Bloor Street West, Toronto ON M6H 1M4-Tel: 416 536-3333 stanthonysto.archtoronto.org Mass: 7:00pm; Veneration: from 1:00pm to 8:00pm

Tuesday, June 9
St Patrick's Parish 53 Wellington St, Cambridge ON N1R 3Y6-Tel: 519 623-3773 stpatrickscambridge.ca Mass: 5:00pm; Veneration; from 11:00am to 6:00pm

Wednesday, June 10
St. Rose of Lima Parish 3216 Lawrence Avenue East, Scarborough On MIH 1A4-Tel: 416 438-6729 stroseoflimasc.archtoronto.org Mass: 1:00pm; 7:00pm; Veneration: from 12noon to 9:00pm

Thursday, June 11
St. Mary's Parish Our Lady of the Assumption Church 133 Murray St, Brantford ON N3S 5P8-Tel: 519 753-7316www.marybrantford.com Mass: 7:00pm; Veneration: from 1:00pm to 9:00pm

Friday, June 12
Sacred Heart Parish 70 Toronto Street N, Uxbridge, ON L9P 1C7-Tel: 905 852-6944 sacredheartux.archtoronto.org Masses: 12noon; 7:00pm; Veneration between Masses

Saturday, June 13 St. Bonaventure's Parish 1300 Leslie St, Toronto ON M3C 2K9 - Tel: 416 447-5571 stbonaventuresdo.archtoronto.org Masses: 10:00am; 5:00pm Veneration between Masse

Sunday, June 14 Holy Angels Church 61 Jutland Rd, Etobicoke ON M8Z 2G6 - Tel: 416 255-1691 holyangelset.archtoronto.org Masses: 9:30am (Italian); 3:00pm (bilingual Eng/Ita) followed by Procession; Veneration between Massea

Monday, June 15
St. Francis Xavier Parish 5650 Mavis Road, Mississauga ON L5V 2N6-Tel: 905890-5290 stfrancisxaviermi.archtoronto.org Masses: 1:00pm; 7:00pm; Veneration between Masses

